# பொன் நூல்

## A thread of Gold



உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்,
என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

திருச்சபை: ....................................................................

பெயர்: ............................................................................

வகுப்பு: ..........................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல், ஓய்வுநாட் பாடசாலைப்
பிள்ளைகளின் பாவனைக்கென
தென் இந்திய திருச்சபை யாழ். ஆதீனத்தின்
சமயக் கல்விக் குழுவால்
வெளியிடப்பட்டது

தென் இந்திய திருச்சபை
யாழ் ஆதினம்,
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொன் நூல்

1. சங்கீதம் 23; 1—2

கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார். நான் தாழ்ச்சி அடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்களண்டையில் கொண்டுபோய் விடுகிறார்.

2. சங்கீதம் 46: 1

தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர்.

3. 11 தீமோத்தேயு

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.

4. சங்கீதம் 34: 10

சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவு படாது.

5. ஏசாயா 2: 4

கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற வெள்ளத்தைப் போலிருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும் நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும் பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும் வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்.

6. 1 கொரிந்தியர் 13: 1

நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும் அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சங்கீதம் 27: 1

கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமான வர். யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர் யாருக்கு அஞ்சுவேன்?

8. சங்கீதம் 19: 7

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்து மாவை உயிர்ப்பிக்கிறதுமாய் இருக்கிறது. கர்த்த ருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானி யாக்கிறதுமாய் இருக்கிறது.

9. நீதிமொழிகள் 19: 17

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும் பக் கொடுப்பார்.

10. சங்கீதம் 119: 72

அனேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்.

11. ஏசாயா 40: 31

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெல னடைந்து கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.

12. மீகா 6: 8

மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயம் செய்து, இரக்கத் தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சங்கீதம் 24: 1—2

பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. அவரே அதைக் கடல்களுக்கு மேலாக அஸ்திபாரப்படுத்தி அதை நதிகளுக்கு மேலாக ஸ்தாபித்தார்.

14. 1 பேதுரு 5: 7

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளை எல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

16. சங்கீதம் 116: 12—13

கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்? இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தரின் நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்.

17. நீதிமொழிகள் 28: 13

தன்னுடைய பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். ஆனால் அவற்றை அறிக்கை செய்துவிட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்.

18. பிலிப்பியர் 4: 6

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்துஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.

19. நீதிமொழிகள் 6: 20

என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக் கொள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. ஆமோஸ் 5: 24

நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நதியைப் போலவும் புரண்டு வரக்கடவது.

22. யாக்கோபு 1: 27

திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைப் படாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.

23. 11 கொரிந்தியர் 5: 17

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

24. சங்கீதம் 103: 1, 2

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

25. சங்கீதம் 107: 1

கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்: ..........................................          வயது: ..........................................

வகுப்பு: ..........................................          திருச்சபை: ..........................................

| | வசனம் | திகதி | கை ஒப்பம் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |
| 9 | | | |
| 10 | | | |
| 11 | | | |
| 12 | | | |
| 13 | | | |
| 14 | | | |
| 15 | | | |
| 16 | | | |
| 17 | | | |
| 18 | | | |
| 19 | | | |
| 20 | | | |
| 21 | | | |
| 22 | | | |
| 23 | | | |
| 24 | | | |
| 25 | | | |
| | குறிப்பு:- | | |

..........................................          ..........................................

ஓய்வு நாட் பாடசாலைத் தலைவர்          சபைக்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 2

## 1. இளைப்பாறுதல்

''வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

''நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

''என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது'' என்று இயேசு சொன்னார்.

(மத்தேயு 11:24—30)

## 2. பிறருக்கு உதவுதல்

''சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்''. (11 கொரி 9: 6)

''அவனவன் விசனமாயுமல்ல; கட்டாயமாயுமல்ல. தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன். உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார்,'' (கொரி: 9;7)

''வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவன் நீதி என்றென்றைக்கும் நிற்கும்''. (11 கொரி 9:9)

''உங்களுக்கு உள்ளவைகளை விற்று பிச்சை கொடுங்கள், பழைமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்தில் உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்''. (லூக்கா 12: 33—34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்! நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்''. (லூக்கா: 6: 38)

3. கற்பனைகளுள் பிரதான கற்பனை

நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்; உன் தேவனாகிய கர்த்தரிடத்தில், உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்பு கூருவாயாக என்பதே.

இது முதலாம் பிரதான கற்பனை.

இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனையிலும் நியாயப் பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது''.

(மத். 22; 37—40)

4. ஆவியின் கனி

''ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம் நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை''.

(கலா: 5; 22—23)

5. சிந்திக்க வேண்டியவைகள்

''கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகளோ, புண்ணியமெதுவோ, புகழ் எதுவோ அவை களையே சிந்தித்துக் கொண்டிருங்கள்''.

(பிலி. 4; 8)

### 6. முதலாவது தேடவேண்டியது

''அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால், என்னத்தை உண் போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப் போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல் லாம், அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள், இவைகள் எல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப் பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக் கப்படும்.

ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப் படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

(மத்தேயு 6: 33—34)

### 7. கர்த்தரின் ஜெபம்

பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம் முடைய நாமம் பரிசுத்தப் படுவதாக; உம்முடைய இராச் சியம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்; எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங் களைச் சோதனைக் குட்படப்பண்ணாமல் தீமையினின்று இரட்சித்துக் கொள்ளும். இராச்சியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. பூமியிலே நீங்கள் இருக்க வேண்டிய விதம்

''நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்; வெளியே கொட்டப்படுவதற்கும் மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது.

விளக்கைக் கொழுத்தி மரக்காலால் மூடி வைக்காமல் விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.

இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது.

(மத்தேயு 5: 13—18)

## 9. உண்மையான தர்மம்

''மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில், உங்களுக்குப் பலனில்லை.

ஆகையால் நீ தர்மஞ் செய்யும்போது மனுஷரால் புகழப்படுவதற்கு மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வது போல உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே. அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

நீயோ தர்மம் செய்யும் போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக் கடவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்''.

(மத்தேயு 6: 1—4)

## 10. கர்த்தரிடத்தில் திரும்புதல்

''நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல உங்கள் இருதயங்களைக் கிழித்து உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திருப்புங்கள், அவர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர், அவர் தீங்குக்கு மனஸ்தாபப் படுகிறவருமாய் இருக்கிறார்''.

(யோவேல் 2: 13)

''என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம்பண்ணி என் முகத்தைத் தேடி தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் (கர்த்தர்) கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்குச் சேமத்தைக் கொடுப்பேன்''. (11 நாளா 7: 14)

இயேசு: ''என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை''. (யோ: 6: 37)

'விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்''. (எபி: 11: 6).

## 11. ஜெபம் பண்ணுவதெப்படி?

''அன்றியும் நீ ஜெபம் பண்ணும் போது, மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம். மனுஷர் காணும் படியாக, அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளிலும் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்த தென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.

நீயோ ஜெபம் பண்ணும் போது உன் அறை வீட்டுக் குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்தி லிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு. அப் பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா தாமே வெளி யரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.

அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும் போது அஞ்ஞானி களைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். அவர்கள் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப் படுமென்று நினைக்கிறார்கள்.

நீங்கள் ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது,''......
(பரமண்டல ஜெபம்) (மத்தேயு 6: 5—9)

12. இயேசுவின் 12 சீவுர்களின் பெயர்கள்

(i) பேதுரு என்னப்பட்ட சீமோன்.

(ii) அவன் சகோதரனாகிய அந்திரேயா.

(iii) யாக்கோபு.

(iv) யோவான்.

(v) பிலிப்பு.

(vi) பர்தொலோ மேயு.

(vii) மத்தேயு.

(viii) தோமா.

(ix) அல் பேயுவின் குமாரனாகிய யாக்கோபு.

(x) செலோத்தே எனப்பட்ட சீமோன்.

(xi) யாக்கோபின் சகோதரனாகிய யூதா.

(xii) யூதாஸ் காரியோத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. இஸ்ரவேலின் 12 கோத்திரங்கள்

(i) ரூபன்
(ii) சிமியோன்
(iii) யூதா
(iv) செபுலோன்
(v) இசக்கார்
(vi) தாண்
(vii) காத்
(viii) ஆசேர்
(ix) நப்தலி
(x) எப்பிராயீம்
(xi) மனோசே
(xii) பெஞ்சமின்

## 14. விசுவாசப் பிரமாணம்

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய கடவுளை விசுவாசிக்கிறேன். அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம் பண்ணப்பட்டுப் பாதாளத்தில் இறங்கினார். மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்திருந்தார். பரலோகத்துக் கெழுந்தருளி, சர்வ வல்லமையுள்ள கடவுளின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந் தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீர உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

## 15. ஜெபம்

கடவுளே, என் இறைவனே, என் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தந்தையே, நான் என்னுடையவன(ள)ல்லன்; உம்முடையவன்(ள்). உமது பேரருளைச் சார்ந்து, உம்முடைய பிள்ளையாக, என் வாழ்நாளெல்லாம் உம்மை உண்மையோடு நேசிக்கவும், சேவிக்கவும், நான் என்னையே உமக்கு அர்ப்பணம் செய்கிறேன். ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்: ............................ வயது: ............................

வகுப்பு: ............................ திருச்சபை: ............................

| | வசனம் | திகதி | கை ஒப்பம் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |
| 9 | | | |
| 10 | | | |
| 11 | | | |
| 12 | | | |
| 13 | | | |
| 14 | | | |
| 15 | | | |

குறிப்பு:-

............................ ............................

ஓய்வு நாட் பாடசாலைத் தலைவர் சபைக்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 3

## 1. ''நானே''

(அ) இயேசு அவர்களை நோக்கி;
''ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்''. (யோ: 6; 35)

(ஆ) ''நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான். (யோ 8: 12)

(இ) ''நானே வாசல். என் வழியால் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப் படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்''. (யோ. 10: 9)

(ஈ) ''நானே நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.
(யோ. 10; 11)

(உ) ''நானே உயிர்த் தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்''. (யோ. 11; 25)

(ஊ) ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோ. 14: 6)

(எ) ' நான் மெய்யான திராட்சைச் செடி, என் பிதா திராட்சைத் தோட்டக்காரன்''. (யோ 15: 1)
—என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. உண்மையான உபவாசம்

''மனுவுன் தன் ஆத்துமாவை ஒடுக்கிறதும், தலை வணங்கி நாணலைப் போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக் கொள்ளுகிறதும், எனக்குப் பிரியமான உபவாச நாளாயிருக்குமோ? இதையா உபவாசமென்றும், கர்த் தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்?

அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடி யின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக் கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும், சகல நுகத் தடிகளையும் உடைத்துப் போடுகிறதும், பசியுள்ளவனு க்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத் துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள் கிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும் உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உக ந்த உபவாசம்.

அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுக வாழ்வு சீக்கிரத்தில் துளிர் த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும். கர்த்த ருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்.

*(ஏசாயா 58: 5—8)*

## 3. அன்பு

''நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளை யும் பேசினாலும் அன்பு எனக்கிராவிட்டால், சத்த மிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது. இறுமாப் பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது. தற் பொழிவை நாடாது. சினமடையாது. தீங்கு நினையாது. அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோ ஷப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு ஒருக்காலும் ஒழியாது''.
(1 கொரி 13; 1, 4—6, 8).

''தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்''.
(யோ: 4; 12).

''தேவனை ஒருவரும் ஒரு போதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூருவதால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்''. (1 யோ: 4; 12).

### 4. பத்துக் கற்பனைகள்

''உன் ஆண்டவராகிய கடவுள் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

நீ உனக்கு யாதொரு விக்கிரகத்தையும் உண்டு பண்ண வேண்டாம். நீ அதை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்.

உன் ஆண்டவராகிய கடவுளுடைய திருநாமத்தை, வீணிலே வழங்காதிருப்பாயாக.

ஒய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக.

உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக.

கொலை செய்யாதிருப்பாயாக.

விபச்சாரஞ் செய்யாதிருப்பாயாக.

களவு செய்யாதிருப்பாயாக.

பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

பிறனுடைய பொருளை இச்சியாதிருப்பாயாக''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பாக்கிய வசனங்கள்

''ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்;
பரலோக ராஜ்யம் அவர்களுடையது.
துயரப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்;
அவர்கள் ஆறுதலடைவார்கள்.
சாந்த குண முள்ளவர்கள் பாக்கியவான்கள்;
அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்
நீதியின் மேல் பசிதாக முள்ளவர்கள் பாக்கியவான்கள்;
அவர்கள் திருப்தியடைவார்கள்.
இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;
அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.
இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;
அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.
சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்;
அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்
நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்;
பரலோக ராஜ்யம் அவர்களுடையது.
என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப் படுத்தி பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.
சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்
பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்;''

*(மத்தேயு 5: 3—12)*

## 6. கர்த்தரின் கூடாரத்தில் தங்கியிருப்பவன்

### சங்கீதம் 15

கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன் தானே.

அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்கு செய்யாமலும், தன் அயலான் மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.

ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன்; கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம் பண்ணுகிறான் ; ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்.

தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும் குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான். இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை.

## 7. நீதிமான்களின் வழி

### சங்கீதம் 1

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.

துன்மார்க்கரோ அப்படியிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால் துன்மார்க்கர் நியாயத் தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலை நிற்பதில்லை.

கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும்.

## 8. மரியாளின் புரட்சிக் கீதம்

*(லூக்கா 1: 46—55)*

அப்பொழுது மரியாள்:

''என் ஆத்துமா கர்த்தரை மகிமைப் படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களி கூருகிறது. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார். இதோ இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்.

வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார். அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது.

தம்முடைய புயத்தினாலே பராக்கிரமம் செய்தார். இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார்.

பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி தாழ்மையானவர்களை உயர்த்தினார்.

பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பி விட்டார்.

நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ் செய்ய நினைத்து

தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. என் மேய்ப்பர் கர்த்தர்

### சங்கீதம் 23

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.

அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.

அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத்தேற்றும்.

என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தபடுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.

## 10. கர்த்தரே எமது பாதுகாப்பு

### சங்கீதம் 121

எனக்கு ஒத்தாசைவரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிற வர் உறங்கார்.

இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை.

கர்த்தர் உன்னைக் காக்கிறவர், கர்த்தர் உன் வலது பக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.

பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன் னைச் சேதப்படுத்துவதில்லை.

கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப் பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இது முதற் கொண்டு என்றைக்கும் காப்பார்.

## 11. ஆவியின் வரங்கள்

வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒரு வரே.

ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே.

கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லோருக் குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே.

ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோ ஜனத்துக்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.

எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத் தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,

வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும் வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.

இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.

## 12. ஒப்படைப்பு ஜெபம்

நான் எனக்கல்ல, உமக்கே சொந்தம்; உமக்குச் சித்தமானதைச் செய்யவும், உமக்குச் சித்தமானவர்களோடு இருக்கவும், நற்செய்திகளைச் செய்யவோ அல்லது துன்பங்களைச் சகிக்கவோ, உமது பணிக்கென்று பயன் படுத்தப்படவோ, பயன்படுத்தப்படாமலிருக்கவோ; உயர்த்தப்படவோ, தாழ்த்தப்படவோ, நிரப்பப்படவோ, வெறுமையாக்கப்படவோ; எல்லாமுடையவனாகவோ, யாதுமற்றவனாகவோ; எதுவானாலும் உமது விருப்பப்படியேயும் உமது தீர்மானத்தின் படியேயும் நடப்பேனென்று எல்லாவற்றையும் உமக்குப் பூரணமாகவும் மனமுவந்தும் ஒப்படைக்கிறேன்.

மகிமையும், கிருபையும் நிறைந்த பிதா, குமாரன், பரிசுத்தாவியுமாகிய கடவுளே, நீர் என்னுடையவர்; நான் உம்முடையவன், அப்படியே ஆகக்கடவது. பூலோகத்தில் நான் புதுப்பித்த இந்த உடன்படிக்கை, பரலோகத்திலும் முத்திரிக்கப்படுவதாக.—ஆமென்.

## 13. சமாதானத்திற்கான செபம்

இறைவா

உம் சாந்தியின் கருவியாக என்னை ஆக்கியருளும்.
எங்கு பகையுள்ளதோ அங்கு அன்பையும்
எங்கு மனவருத்தமுள்ளதோ அங்கு மன்னிப்பையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு ஐயமுள்ளதோ அங்கு நம்பிக்கையையும்
எங்கு இருள் உள்ளதோ அங்கு ஒளியையும்
எங்கு துன்பமுள்ளதோ அங்கு இன்பத்தையும்
நான் பரப்பிட அருள் தாரும்.

நான் ஆறுதலுக்காக அலைவதைவிட்டு
ஆறுதலைக் கொடுக்க விழைவேனாக.
என்னை மற்றோர் புரிந்துகொள்ள வேண்டுமென்று துடிப்பதை விடுத்து
ஏனையோரைப் புரிந்து கொள்ள விழைவேனாக.
என்னை மற்றவர்கள் நேசிக்க வேண்டுமென்று தவிப்பதை விடுத்து
மற்றவர்களை நேசிக்க முற்படுவேனாக;

ஏனெனில்,

கொடுப்பதன் மூலம்தான் பெற்றுக்கொள்ள முடியும்.
மன்னிப்பதன் மூலம்தான் மன்னிப்பை அடையமுடியும்
மடிவதன் மூலம்தான் முடிவில்லா வாழ்விற்குப் பிறக்க முடியும்.

—ஆமென்

## 14. அருட்குறள்

1. வழிவாழ்வு வாய்மையாம் வான்மகவைத் தந்து
வழிநடத்தும் வள்ளலை வாழ்த்து.

2. மருந்துகள் மருந்தாம் மறையை அருந்தில்
திருந்தும் திருந்தா மனம்.

3. நானே வழிவாழ்வு வாய்மைஎன் வாய்மலர்ந்த
கோனே கொழுகொம்பாய்க் கொள்.

4. விண்ணப்பம் செய்துருவி வேண்டுவோர் கண்டடையும்
விண் அப்பம் யேசு திரு வேந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இறைவன்எம் மேய்ப்பன்; இனிமையே என்றும்;
நிறையன்பில் நிற்போம் நெடிது.

6. வருந்திப் பொறை சுமக்கும் மைந்தீர்! மனமே
திருந்தி இளைப்பாறும் சேர்ந்து.

7. இறையுள்ளம் செய்யும் இடமே பரமாம்
நிறை இன்பம் தேங்குமே நீரு.

8. நீரின்றி மீன்சிறிது வாழும்; ஏசு! நீரின்றி
நான்சிறிதும் வாழ்தல் அரிது.

9. இன்னாத செய்தாரை மீட்டவர் இன்புற
நன்னயம் பெய்து கொளல்.

10. இல்லத்தின் தலைவராம் இயேசு இருந்தால்
இல்லை என்பது இல்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்: ..............................  வயது: ..............................

வகுப்பு: ..............................  திருச்சபை: ..............................

| | [illegible] | திகதி | கை ஒப்பம் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |
| 9 | | | |
| 10 | | | |
| 11 | | | |
| 12 | | | |
| 13 | | | |
| 14 | | | |

குறிப்பு: -

..............................  ..............................

ஓய்வு நாட் பாடசாலைத் தலைவர்  சபைக்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*Printed at*
Arnold's International
Printing House (Pvt) Limited
169/1, Union Place Colombo 2.
Tel : 20485

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org